தலைப்பு 308 - தபால் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 308 - தபால் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இல்ங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமானங்களைப் பெற்றுக்கொள்ளல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
(i)	திணைக்கத்ளதினால் வெளிநாட்டு தபால் நிருவாக நிறுவனத்திற்காக கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பித்துள்ள போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த தபால் நிருவாக நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படபடாத நிலுவை வருமான மீதி ரூபா 355,410,140 ஆக இருந்ததுடன் அது 01 ஆண்டிலிருந்து 08 ஆண்டுகள் வரையான கால வீச்சில் பரந்திருந்தது.	வெளிநாட்டு தபால் நிருவாக நிறுவனம் தொடர்பான வருமானத்தை அங்கீகரித்தல் தாமதமடைந்தமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.	அங்கீகரிக்கப்படாத நிலுவை வருமானத்தில் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை ரூபா 216,938,844 பணம் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் ரூபா 138,471,295 தொகை இன்னும் அங்கீகரிக்கப்பட உள்ளது எனவும் நிலுவை வருமானம் அங்கீகரிக்கப்படாத நாடுகளுக்கு தொடர்ச்சியாக ஞாபகப்படுத்தல்களை அனுப்பி அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அந்த

			நிலுவை வருமானத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(ii)	ஏசீஏ-1 வருமான கூற்றில் பணமாக மீளச் செலுத்துதல் ரூபா 11,861,687 மற்றும் பிழைகளை சரிசெய்தல் ரூபா 13,785,759 ஆக மீளச் செலுத்துதல்களின் மொததம் ரூபா 25,647,446 காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றில் அங்கீகாரம் கிடைத்துள்ள பணத்திலிருந்து மீளச் செலுத்துதல் ரூபா 1,140,173 மற்றும் பிழைகளை சரிசெய்தல் ரூபா 4,393,293 ஆக உள்ளதுடன் அதன் முழுப்பெறுமதி ரூபா 5,533,466 ஆம். அதற்கிணங்க ரூபா 20,113,980 இனை மீளச் செலுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்படவில்லை.	வருமானத்தில் மீளச் செலுத்துதல் மற்றும் பிழைகளை சரி செய்வதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.	எதிர்காலத்தில் பொது 29 படிவத்தின் மூலம் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்றுக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சிபாரிசுகள**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**
(i)	அனுராதபுரம் மாவட்ட கணக்கு அலுவகத்தில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனித்தனி கடன மீதி ரூபா 111,787,510 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 115,008,249 ஆகும். அக்கடன் மீதியை ஒப்பீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கூற்றில் கடன் மீதியை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காது அடையாளங்காணமுடியாத தனித்தனி கடன் மீதியாக ரூபா 2,483,221 கணக்கிணக்கம்	தனிதனி கடன் மீதியும் கட்டுப்பாட்டு கணககின் மீதியும் கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்.	அனுராதபுரம் மாவட்ட கணக்கு அலுவலகத்தில் காணப்பட்ட ரூபா 2,483,221 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதி சம்பந்தமாக கணக்குகளை மீண்டும் பரீட்சித்தல் இடம்பெற்று வருகின்றது எனவும் துரிதமாக அந்த தவறினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை

	செய்யப்படாத மீதி காணப்பட்டது.		எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன்.
(ii)	களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் பல ஆண்டுகளாக ரூபா 749,440 கணக்கீட்டு குறைபாடு காணப்பட்டதுடன் அதனை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அடையாளங்காணப்பட்டு கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	கணக்கீட்டு குறைபாடுகள் சரிசெய்யப்படுதல் வேண்டும்.	கணக்கீட்டு குறைபாடுகளை தீர்த்துவைத்தல் சம்பந்தமாக ஆலோசனையைப் பெற்று தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
(iii)	களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் 11 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 1,295,400 பெறுமதியான நிதி மோசடிகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 வரை அதில் ரூபா 1,145,850 மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிகைக எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் திணைக்களம் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பொறுப்புக்கூற வேண்டிய நபர்களை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இக்கடன் மீதியானது திணைக்களத்தின் கடனை பதிவழிக்கும் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
(iv)	மீளாய்வாண்டின் இறுதியில் மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட, சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் ஏனைய உத்தியோகத்ரத்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 61,225,431 ஆக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் கடன் மீதி ரூபா 20,679,788 ஆகும்.	நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

	அவதானிப்புக்கள்		சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	**பெறுமதி** **ரூபா**	**இணக்கமின்மை**		
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை				
(i) VIII ஆம் அத்தியாயத்தின் 2.1, 3.1, 3.3, 3.5 மற்றும் 3.6 ஆம் பிரிவுகள் மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை.	7,024,144	விரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை கவனித்துப் பார்க்காது பிற்பகல் 16.15 மணிக்கு தபால் தலைமையகத்திலிருந்து வெளிச்செல்லும் ஊழியர்கள் இரவு 7, 8, 9, 10 ஆகிய நேரங்களில் கடமைகளை மேற்கொண்டார்கள் எனக் காட்டி ரூபா 7,024,144 மேலதிக நேர வேலைப்படி திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக செலுத்தப்பட்ட மேலதிக நேர	தாபன விதிக் கோவையிலுள்ள உரிய ஏற்பாடுகளுக்கு இணங்கவும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்கவும் நவடிக்கை எடுத்தல் வேண்டும்.	திணைக்களத்தில் காணப்படுகின்ற 1651 ஆன தபால் சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் காரணமாக அவசர செயற்பாடுகளை தற்பொழுது மேலதிக நேர வேலையின் அடிப்படையில மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

			வேலைப்படி கொடுப்பனவுகளின் சரியான தன்மையை கணக்காய்வில் பரீட்சிக்க முடியாதுள்ளது.		
(ii)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின 2.1, 3.1, 3.3, 3.5 மற்றும் 3.6 ஆம் பிரிவுகள் மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகை	1,030,910,731	விரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்படாதிருந்தும் மத்திய தபால் பரிமாறறில் 2023 சனவரியிலிருந்து 2024 மே 31 வரை 28,403 ஊழியர்களுக்கு ரூபா 651,149,689 தொகையும் கட்டுப்பாட்டு புலனாய்வு அலுவலகத்தில் 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2024 மே 31 ஆந் திகதி வரை 07 ஊழியர்களுக்கு ரூபா 4,067,021 தொகயும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை கவனித்துப் பார்க்காது 14 மாவட்ட கணக்கு அலுவலகங்களினால் 2024 சனவரியிலிருந்து யூன் வரை ரூபா	தாபன விதிக் கோவையிலுள்ள உரிய ஏபாடுகளுக்கு இணங்க மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் உததியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகைதரல் மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்துவது சம்பந்தமாக அறிக்கைகளை வைத்திருக்க வேண்டியதுடன் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தின சமபளம் முதலிய நிரந்தர கடமை நேரங்களுக்குப் பின்னர் செலுத்தப்படுகின்ற	திணைக்களத்தில் காணப்படுகின்ற 1651 ஆன தபால் சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களின் காரணமாக அத்தியாவசியமான மற்றும் மிகவும் அவசரமான செயற்பாடுகளை தற்பொழுது மேலதிக நேர வேலையின் அடிப்படையல் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

373,874,705 தொகையும் தபால் போக்குவரத்துப் பிரிவில் 2024 சனவரியிலிருந்து மே வரை 15 ஊழியர்களுக்கு ரூபா 1,819,316 தொகையுமாக மொத்தமாக ரூபா 1,030,910,731 தொகை மேலதிக நேர வேலை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.	படிகளுக்காக நேரம் அடிப்படையாகக் கொள்ளப்படுமாயின் அந்த நேரம் விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சிபாரிசுகள**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** .
நி.பி 85(1) மற்றும் நி.பி 85(2) இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான மதிப்பீடும் திருத்திய வருமான மதிப்பீடும் நடைமுறைச சாத்தியமாக மற்றும் சரியான முறைமையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும திணைக்கதள்தின் 21 வருமானத் தொகுதிகளின் பாதகமான முரண் ரூபா 666,310 இலிருந்து ரூபா 473,524,039 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 16 வருமானத் தொகுதிகளின் பாதகமான முரண் ரூபா 1,610,499 இலிருந்து ரூபா 1,090,364,358 வரையான விச்சில் காணப்பட்டது.	வருமான மதிப்பீட்டினை நடைமுறச் சாத்தியமாகவும் சரியான முறைமையிலும் தயாரித்தல் வேண்டும்.	சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமனற பொதுத் தேர்தலுக்காக தபால் சேவைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்தல், புதிய முகவர் சேவையை 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்தல், விற்பனைப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்ட மேம்படுத்தல் நடவடிக்கை காரணமாக வருமானம் அதிகரித்தல் முதலிய விடயங்கள் மதிப்பீட்டினை தயாரித்த சந்தர்ப்பத்தில அதில் உள்ளடக்காமைக்கான காரணம் என மற்றும் பாவனையாளர் மின் அஞ்சல் போன்ற மாற்று முறைமைகளுக்கு பழக்கப்படல், வியாபார நிறுவனங்கள e-bill வழங்குதல், வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தில் மாற்றங்கள், மின்சாரக் கட்டணம்

			குறைவடைதல், இணைய வழி முறைமைகளுக்குத் தொடர்புபடுதல் போன்ற காரணங்களினால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது.

2.2 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
(i)	நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாடு மாற்றம் செய்யப்பட்ட 04 செலவு விடயங்களில் ரூபா 163,508,097 நிதி எற்பாடு சேமிப்பாக இருந்தது. மேலும் இதில் அடங்கியுள்ள 308-02-01-1003 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டினூடாக நிதி எற்பாடு வழங்கப்பட்டிருந்தது.	செலவு விடயங்களுக்குரிய செலவுகளை சரியாக மதிப்பீடு செய்து நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எதிர்பார்த்தவாறு செலவுகள் இடம்பெறாததன் அடிப்படையில் மற்றும் புகையிரத திணைக்களம் எதிர்பார்த்தவாறு செலவுகளை கணக்கீடு செய்யாமையின் அடிப்படையிலும சேமிப்பு உருவாகியுள்ளது.
(ii)	மிகை நிதி ஏற:பாடு பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக 15 மீண்டுவரும் செலவு விடயங்களில் மற்றும் 08 மூலதன செலவு விடயங்களில் மொத்தமாக ரூபா 2,430,343,189 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது 10 சதவீதத்திலிருந்து 99 சதவீத வீச்சு வரை பரந்திருந்தது.	செலவு விடயங்களுக்குரிய வருடாந்த செலவுகளை சரியாக மதிப்பீடு செய்து நிதி ஏறபாட்டினைப் பெற்றுகொள்ளுதல் வேண்டும்.	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் எதிர்பார்த்தவாறு செலவுகள் இடம்பெறாததனால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
(i)	2022 ஆம் ஆண்டின் போது அடையாளங்காணப்பட்ட ரூபா 1,459,584 தீர்த்துவைக்கப்படாத கடப்பாடுகள் பொறுப்புக்கள் பெறுமதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்டது. மேலும் இப்பெறுமதிகளில் 09	அனைத்து பொறுப்புக்களையும் நிர்ணயிக்கப்பட்டவாறு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	எதிர்காலத்தில் இவ்வாறான குறைபர்டுகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு

	விடயங்களின் பெறுமதி ரூபா 1,024,884 சிகாஸ் நிகழச்சித்திட்டத்தில் காணப்பட்டிருந்தும் இறுதிக் கணக்குகளில் நீக்கப்பட்டிருந்தது.		தெரியப்பட்டுத்தப்பட்டுள்ளது.
(ii)	2024 திசெமபர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்த வேண்டிய மாதிரிகளில் காட்டப்பட்டுள்ள பின்னிணைப்பு (III) இன் பிரகாரம் மற்றும் 2024 நவம்பர் 20 ஆந் திகதிய 05/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 4.8 ஆம் பிரிவின் பிரகாரம் புதிய சிகாஸ் இணைய வளி பக்கத்திலிருந்து தரவு ஏற்றம் செயய்யப்பட்ட கடப்பாடுகளும் பொறுப்புகளும் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் நி.பி 94(2)(3) இன் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 500,312,809 சமபந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி, 2024 நவம்பர் 20 ஆந் திகதிய 05/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின் 4.8 ஆம் பிரிவின் பிரகாரம் புதிய சிகாஸ் இணைய தள பக்கத்திலிருந்து தரவு ஏற்றம் செய்யப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.	ரூபா 500,312,809 தொகை 2024 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு போதாமையின் காரணமாக சிகாஸ் முறைமைக்கு கடப்பாடுகள் மற்றும் பொர்றுப்புக்களாக உள்ளடக்குவதற்கு இயலுமை இல்லை.
(iii)	சிகாஸ் நிகழ்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 434,700 பொறுப்புக்கள் அரசாங்க அச்சகத்திற்கு செலுத்த வேண்டியதுடன் அவை இரட்டை கணிப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும் கிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் அப்பொறுப்புக்கள் 2022/2023 ஆம் ஆண்டுகளிலிலிருந்து காணப்படுகின்ற பெறுமதிகள் ஆனதுடன் அப்பெறுமதி 2024 ஆம் ஆண்டில் உருவாகிய கடப்பாடுகளாகவும் அடையாளம் காணப்பட்டிருந்தது.	அனைத்து நிதிக் கூற்றில் கடப்பாடுகள் கடப்பாடுகளும் மற்றும் பொர்றுப்புக்கள் கூற்றின் கீழ் சரியாக அயையாளஙகாணப்படுதல் வேண்டும்.	எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(iv)	சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் அடையாளங்காணப்பட்டிருந்த ரூபா 30,610,050 பெர்றுப்புக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் பொறுப்புக்கள் கூற்றின் கீழ் அடையாங்காணப்படவில்லை.	அனைத்து கடப்பாடுகளும் பொறுப்புக்களும் சரியாக நிதிக்கூற்றுக்களில் அயைடாளங்காணப்படுதல் வேண்டும்.	எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
(v)	2024 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 1,254,870 பெறுமதியான பொறுப்புக்களுக்காக 2025 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட போதிலும் அவை பெர்றுப்புக்களாக கணக்ககளில் அடையாளங்காணப்படவில்லை.	கடப்பாடுகளும் பொறுப்புக்களும் சரியாக நிதிக்கூற்றுக்களில் அடையாளங்காணப்படுதல் வேண்டும்.	எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாமைக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(vi)	நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்த வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் 06 செலவு விடயங்களுக்கு நிதி எற்பாட்டினை மிகைத்து ரூபா 21,665,612 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.	நிதிப் பிரணமாம் 94(1) இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை மிகைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும்.	01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க சரியாக கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(vii)	01/2024 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 2.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளங்கள், படிகள், போக்குரத்து செலவுகள் என்பவற்றின் கீழ் 308-02-01-1002 ஆம் இலக்க செலவு விடயத்தின் மூலம் மேலதிக நேர வேலைப் படிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டு வரம்பிற்குள மாத்திரம் செலவு செய்யவதற்காக கடப்பாடுகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டினை மிகைத்தல் ரூபா 1,641,680 ஆக இருந்த போதிலும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 6,574,295 ஆகும். அதற்கிணங்க நிதி ஏற்பாட்டினை மிகைத்ததிலிருந்து பெறுமதி ரூபா 4,932,615 ஆகும்.	01/2024 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 2.2.1 ஆம் பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க சரியாக கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(viii)	01/2024(12) ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் முறைப்படியாக ஒன்றிணைத்து திறைசேரி தகவல் முறைமை மற்றும் புதிய சிகாஸ் கணக்குகள் தகவல் முறைமையினுாடாக திறைசேரிக்கு அறிக்கையிட வேண்டும் என காட்டப்பட்டுள்ள போதிலும் பின்னிணைப்பு IV இன் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 500,312,809 பொறுப்புக்கள் அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை.	01/2024(12) ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து கடப்பாடுகளும் பொறுப்புக்களும் புதிய சிகாஸ் கணக்கு தகவல் முறைமையினுாடாக திறைசேரிக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.	எதிர்காலத்தில் 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க சரியாக கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.4 வைப்புக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சிபாரிசுகள**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**
(i)	மீளாய்வாண்டின் இறுதி வரை மூன்றாந் தரப்பினர்களுக்கு மீளச் செலுத்துவதற்காக நிறுத்திவைக்கப்பட்ட (13/39) வைப்புத் தொகை ரூபா 6,260,888 ஆனதுடன் அவற்றில் ரூபா 390,616 தொகை 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக் தொகையானதுடன் அவை சம்பந்தமாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நி.பி 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2025 ஆம் ஆண்டின் போது அரசாங்க வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(ii)	2021 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 03 பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ரூபா 4,331,100 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறியினை பொறுப்பேற்று அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.	பெறுகைச் செயற்பாடுகள் முடிவடைந்துள்ள மற்றும் உரிய நிறுவனம் வேண்டுதல் கடிதத்தினை சமர்ப்பிக்கவில்லையாயின் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2025 ஆம் ஆண்டின் போது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்து.

2.5 வங்கி கணக்கு செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
14 மாவட்ட கணக்கு அலுவலகங்கள், மத்திய தபால் பரிமாற்று, முத்திரை பணியகம், தலைமை அலுவலகம் என்பவற்றின் 30 வங்கி கணக்குகளின் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாது 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகள் ரூபா 14,436,227 தொகையும் அடையாளங்காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 61,199,823 தொகையும் அடையாளங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 275,924,776 தொகையுமாகும்.	கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்காத காசோலைகள் சம்பந்தமாக நி.பி 396(ஈ) இன் பிரகாரம் அதாவது காசோலைகள் வழங்கிய திகதி, அவற்றினை செல்லுபடியாக்கிய திகதி ஆகிய இரண்டில் பின்னர் உருவாகின்ற திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் அவை பணமாக்கப்படாது இருக்குமாயின் அக்காசோலைகளை இரத்துச் செய்து காசோலைகளின் பெறுமதி கொடுப்பனவு செய்வதற்குள்ள கடனாக நிர்ணயிக்கப்பட்ட பேரேடுகளில் பதியப்படுதல் வேண்டும்.	பரீட்சித்துப் பார்த்து தாமதமின்றி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
(i) திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 10 செயற்திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மிகையாக இருந்தது.	நிதி ஏற்பாட்டினை சரியாக மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் மதிப்பீடு செய்த நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் செலவு செய்தல் வேண்டும்.	2024 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள 10 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எற்பாட்டினை செலவு செய்தல் சம்பந்தமாக உரிய மாகாணத்தின் பிரதி தபால் மா அதிபரிடம் விசாரித்து கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ii)	திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிகைகைத் திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கைக்கு இணங்க ஆண்டின் போது அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட முழு செயற்திட்டங்களின் எண்ணிக்கை 216 ஆக இருந்ததுடன் அவற்றில் 133 செயற்திட்டங்கள் மாத்திரம் முடிவடைந்திருந்தன.	திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்திசெய்தல் வேண்டும்.	போதிய பதில் வழங்கப்படவில்லை.

3.2 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சிபாரிசுகள**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**
திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் பொது Miniature Sheets of Sri Lanka வெளியீட்டின் ஒரு பிரதி ரூபா 4,860 வீதம் 500 பிரதிகள் ரூபா 2,430,000 இற்கு அச்சிடப்பட்டிருந்ததுடன் ஒரு வெளியீட்டினை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள ஞாபகார்த்த தாள்களின் எண்ணிக்கை 118 ஆக இருந்ததனால் 500 வெளியீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள ஞாபகார்த்த தாள்களின் அளவு 59,000 ஆகும். ஒரு வெளியீட்டில் உள்ள ஞாபகார்த்த தாள்களின் பெறுமதி ரூபா 8,244 ஆக இருந்ததுடன் ஞாபகார்த்த தாள்களின் முழுச் செலவு ரூபா 4,122,125 ஆகும். இச்செலவுகளுக்கு மேலதிகமாக ஞாபகார்த்த பத்திரங்களின் கைப்பிடிகளை கொள்வனவு செய்வதற்காக யூரோ 6,415 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது ரூபா 6,552,125 மற்றும் யூரோ 6,415 செலவு செய்து அச்சிடப்பட்ட எந்த வெளியீடும் விற்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. அந்த வெளியீடுகள் சீல் செய்யப்பட்டு அலுமாரியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பிரதான உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு இணங்க அந்த	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு அதற்கிணங்க முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் பரீட்சிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

	அலுமாரியில் 482 வெளியீடுகள் இருந்தது எனவும் அதற்கிணங்க 18 வெளியீடுகளின் பற்றாக்குறை காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது.		

3.3 சொத்தக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
(i)	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் (308-02-01-2104) செலவு விடயத்தின் கீழ் பொலன்னறுவை தபால் அலுவலகத்திற்காக ஒரு ஒற்றை மாடிக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 62,900,000 செலவு செய்யப்பட்டிருந்தும் 2024 திசெம்பர 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கள கூற்றில் இச்சொத்து விடயம் உள்ளடக்கப்படவில்லை.	2024 திசெமபர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கள் கூற்றிற்கு இச்சொத்து விடயத்தின் பெறுமதி உள்ளடக்கப்படுதல் வேண்டும்.	பொலன்னறுவை தபால் அலுவலகத்திற்காக ரூபா 62,900,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட ஒற்றை மாடிக் கட்டிடத்தினை சிகாஸ் நிகழ்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
(ii)	மீளாய்வண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் கணக்கு அறிக்கையின் (SA-82) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிட பெறுமதியாக ரூபா 2,395,758,600 காட்டப்பட்டிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுக்கு இணங்க மோதர தபால் அலுவலக கட்டிடத்தின் பெறுமதி ரூபா 2,200,000 இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதி ரூபா 2,200,000 ஆல் அதிகரித்துக காட்டப்பட்டிருந்தது.	நிதியற்ற சொத்துக்கள் கணக்கு அறிக்கையினையும் பட்டோலையினையும் ஒப்பிட்டு சரியான கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும்.	மோதர தபால் அலுவலகம் இரண்டு தடவைகள் பதியப்பட்டதனை சரிசெய்வதற்காக நடவவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அப்பிழை சரிசெய்யப்பட்டதன் பின்னர் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,393,558,600 ஆகும்.
(iii)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 181 வாகனங்கள மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 80,033,122 ஆல் பெறுமதி அதிகரித்தல் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன்	மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்தல் சிகாஸ் நிகழ்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் 05 வாகனங்களின் பெறுமதியும் சிகாஸ்	2025 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது.

	அந்த 181 வாகனங்களில் 05 வாகனங்களின் பெறுமதி சிகாஸ் நிகழசித்திட்டத்தில் உள்ளடக்கியிருககாததுடன் வாகனங்கள் தொடர்பான பட்டியலில் குறிப்பிடப்படாத 02 வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	நிகழ்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.	
(iv)	2023 ஆம் ஆண்டில் மினுவங்கொட தபால் அலுவலக உத்தியோகபூர்வ இல்லம் ரூபா 2,600,000 தொகைக்கும் உடுகம் பொல தபால் அலுவலகம் ரூபா 3,800,000 தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இவை சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கபபட்டிருக்கவில்லை. உடுகம்பொல தபால் அலுவலகத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியானது நிதியற்ற சொத்துக்கள் மீதியில் உள்ளடக்கப்படாததுடன் அது முறைப்படிபயாக ஒப்படைக்கப்படாத ஒரு தபால் அலுவலகம் என மேலும் அவதானிக்கப்பட்டது.	மதிப்பீட்டுப் பெறுமதி சிகாஸ் நிக்ழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் முறைப்படியாக பொறுப்பேற்கப்படாத தபால் அலுவலகங்களை முறைப்படியாக பொறுப்பேற்று மதிப்பீட்டுப் பெறுமதியை நிதியற்ற சொத்துக்கள் மீதியில் உள்ளடக்குதல் வேண்டும்.	பதல் வழங்கப்படவில்லை.
(v)	திணைக்களத்தினால் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 333 தபால் அலுவலகங்களும் 04 பிரதான நிறுவனங்களும் அமைந்துள்ள காணிகள் முறைப்படியாக பொறுப்பேற்கப்பட்டிருக்காததுடன் பொறுப்பேற்கப்பட்டுள்ள போதிலும் மதிப்பீடு செய்யப்படாத காணிகள் மற்றும் கட்டிடஙகளின் எண்ணிக்கை 15 ஆகும். பிரதான நிறுவனங்கள் அமைந்துள்ள 04 கட்டிடங்களும் 02 காணிகளும் பொறுப்பேற்கப்பட்டுள்ள போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மதிப்பீடு செய்து நிதியற்ற சொத்துக்களாக அயைடாளங்காணப்படவில்லை.	முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பெற்றுப்பேற்கப்பட்டுள்ள சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நீதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும்.	காணிகளைப் பொறுப்பேற்பதற்காக தொடர்புபட்ட நிறுவனங்களில் காணப்படுகின்ற வினைத்திறன் மற்றும் சட்டரீதியான நிலைமையின் அடிப்படையில் ஒப்படைக்கும் நடவடிக்கைகளுக்காக குறித்த சில காலம் எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உரிய காணிகளும் கட்டிடங்களும் மதிப்பீடு செய்யும் கட்டத்தில் காணப்படுகின்றது எனவும் பொறுப்பேற்கப்படாத காணிகள் நில அளவை செய்யப்பட்டுள்ளதுடன் முறைப்படியாக

		பொறுப்பேற்பதற்காக வேண்டிக்கொள்ளப்பட்டுள் ளது எனவும் பொறுப்பேற்கப்பட்டுள்ள காணிகளும் கட்டிடங்களும் சிகாஸ் நிகழ்சித்திட்டத்தில் கணக்கீடு செய்யப்படாததுடன் அச்சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் கட்டத்தில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

3.4 நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
(i) 2024 ஆம் ஆண்டில் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஆண்டிற்குள் நட்டத்தை அறவீடு செய்தல்/ பதிவழித்தல் மற்றும் விட்டுவிடுதல் தொடர்பான கூற்றுக்கு பதிவழித்தலாக ரூபா 4,052,263 பெறுமதி அடையாளங்காணப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களில் அயைடளாங் காணப்பட்ட பெறுமதி ரூபா 3,423,311 ஆகும். அதற்கிணங்க ரூபா 628,952 பெறுமதி அடையாளங் காணப்பட்டிருக்கவில்லலை.	நட்டங்கள் மற்றும் சேதங்களாக பதிவழிப்பதற்காக அடையாளங் காணப்பட்டுள்ள பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாக அடையாளங்காணப்படல் வேண்டும்.	உரிய தரவுகள் சேகரிக்கப்பட்டு வருவதுடன் அனைத்து தரவுகளையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் முழுமையான பதில் சமர்ப்பிக்கப்படும்.
(ii) 2024 திசம்பெர 31 ஆந் திகதி வரை 05 ஆண்டுகளுக்கு குறைவான ரூபா 138,570 மீதி 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 542,260 மீதி மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 11,937,179 மீதியுமாக மொத்த பெறுமதி ரூபா 12,618,011 ஆன மீதி இன்னும் அறவிட வேண்டி இருந்தது.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அறவீடு செய்ய முடியவில்லையாயின் நி.பி 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக புலனாய்வு நடவடிக்கைகளும் சட்ட நடவடிக்கைகளும் முடிவடைந்திருக்கவில்லை எனவும் கோவையிலுள்ள குறைபாடுகளின் காரணமாக நி.பி 109 இன் பிரகாரம் நட்டங்களை பதிவழிப்பதற்கு முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சிபாரிசுகள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்
(i)	1,318 தபால் அலுவலகங்களினால் 2024 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரை இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற ஓய்வூதிய முறைமைகளுக்கு பங்களிப்பாளர்களினால் செலுத்திய ரூபா 1,417,632 தொகை மீண்டும் சமூக பாதுகாப்பு சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.	உரிய பங்களிப்பாளர்களினால் செலுத்திய பணத்தை சமூக பாதுகாப்புச் சபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.	ரூபா 445,519 தொகை தற்பொழுது செலுத்தப்பட்டுள்ளது.
(ii)	தபால் திணைக்களத்தினால் 2023 ஆகஸ்ட் 03 ஆந் திகதி மிஹிகத இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கம்பனியுடன் அக்கம்பனியின் பொருட்களை தபால் திணைக்களத்தின் தபால் கூரியர் (SL Post Courier & COD) சேவையினூடாக பகிர்ந்தளிப்பதற்கு இணங்கிக் கொண்டு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் உள்நாட்டு அதிவேக சேவை கட்டணத்தை தபால் கட்டணமாக அறவீடு செய்வதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தும் 47,510 பார்சல் தபால்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மேலும் அதற்காக தேவையான புரிந்துணர்வு உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. உள்நாட்டு பார்சல் சேவையின் கீழ் ஒரு பார்சலுக்கு அறவிடப்படுகின்ற கட்டணம் ரூபா 150 ஆனதுடன் அதற்கிணங்க சாதாரண பார்சல் சேவையின் கிழ் மிஹிகத இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கம்பனியிடமிருந்து பெற்ற 47,510 பார்சல்கள் உள்நாட்டு பார்சல் பிரிவினூடாக பகிர்தளிக்கப்பட்டதன் காரணமாக தபால் திணைக்களத்திற்கு ரூபா 2,375,800 நட்டம் ஏற்பட்டிருந்தது.	புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளை கூறுவது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய நபர்களை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	மிஹிகத நிறுவனம் ஒப்படைத்துள்ள 47,510 பார்சல்களை சாதாரண பார்சல் தபால்களின் கீழ் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.